**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 229/2023 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | கோகுல்குமார் |
| Father Name | : | சுப்பிரமணி |
| Village | : | புள்ளச்செல்லிபாளையம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 27 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.04.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது புள்ளச்செல்லிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். இவ்விபத்தில் இறந்தவர் எனது அப்பா ஆவார். கடந்த 22.05.2023 ஆம் தேதியன்று மாலை 5.00 மணியளவில் மூலனூர் – வெள்ளகோவில் ரோடு புள்ளச்செல்லிபாளையம் பிரிவு அருகே எனது அப்பா TN 42 M 5814 என்ற பதிவு எண் கொண்ட டிவிஎஸ் எக்ஸல் சூப்பர் வாகனத்தில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்று திரும்பும் போது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த ஹீரோ கிளாமர் என்ற இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக ராமசாமி என்பவர் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். விபத்தில் எனது அப்பாவிற்கு கால், வலது கை போன்ற இடங்களில் பலத்த அடிபட்டிருந்தது. பின்னர் தனியார் ஆம்புலன்ஸ்க்கு அருகில் இருந்தவர்கள் தகவல் சொன்னார்கள். பின்னர் நான் எனது அப்பாவை ஆம்புலன்ஸ் மூலம் ஈரோடு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லும் வழியில் அதிக மூச்சுத்திணறல் ஏற்பட்டது. பின்னர் காங்கேயம் அழைத்துவந்து எனது அப்பாவை மருத்துவர் பரிசோதனை செய்துவிட்டு வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார். பின்னர் சம்பவத்தன்று நான் வெள்ளகோவில் காவல் நிலையம் சென்று புகார்

கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எனது அப்பாவின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணையின்போது சாட்சியாக உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

விபத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தொலைபேசி மூலமாக கேள்விப்பட்டுத்தான் தெரிந்துகொண்டேன். இறக்கும்போது எனது தகப்பனாருக்கு என்ன வயது இருக்கும் என்றால் 65 இருக்கும். விபத்து நடந்த சாலையானது அதிக போக்குவரத்து உள்ள சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதியில் இருந்து வெள்ளகோவில் செல்லும் வடக்கு சாலை 40 அடி தூரத்தில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். நான் வெள்ளகோவிலில் இருந்து எனது அப்பாவை அழைத்துவந்த தனியார் ஆம்புலன்ஸில் சென்றேன் என்றால் சரிதான். நான் தான் காங்கேயம் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் விபத்து பதிவேட்டு நகலில் கொண்டு வந்து சேர்த்தவர் பெயர் தனியார் ஆம்புலன்ஸ் என்று உள்ளது என்றால் சரியல்ல. நான்தான் கொண்டு வந்து சேர்த்தேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டு நகலில் கொண்டு வந்து சேர்த்தவர் பெயர் தனியார் ஆம்புலன்ஸ் என்று உள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது தகப்பனார் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு முறையான ஓட்டுநர் உரிமம், பதிவுச்சான்றிதழ், காப்பீடு இல்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் தேதி, நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதியானது தென்வடல் சாலையில் கிழபுறத்தில் எங்கள் வீட்டிற்கு திரும்பும் சாலையின் தென்புறமாக 10 அடி தூரத்தில் நடைபெற்றது என்றால் சரிதான். எனது தந்தை தென்வடல் சாலையின் இடது புறத்தில் இன்னும் 10–15 அடி வந்து வலது புறம் திரும்பி கிழக்கே சென்றிருந்தால் விபத்து நடைபெற்றிருக்காது என்றால் சரிதான். எனது

தகப்பனார்தான் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமல் அவரது இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்று வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.04.09 18:19:45 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 229/2023 |
| Deposition of Witness | : | PW- 2 |
| Name | : | பாலுசாமி |
| Father Name | : | குமாரசாமி |
| Village | : | புள்ளச்செல்லிபாளையம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 70 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.04.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது புள்ளச்செல்லிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ரேஷன் கடைக்கு சென்றுவிட்டு எனது ஊருக்கு வந்து கொண்டிருந்தேன். கடந்த 22.05.2023 ஆம் தேதியன்று மாலை 5.00 மணியளவில் மூலனூர் – வெள்ளகோவில் ரோடு புள்ளச்செல்லிபாளையம் பிரிவு அருகே சுப்பிரமணி அவரது டிவிஎஸ் எக்ஸல் சூப்பர் வாகனத்தில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்று திரும்பும் போது ஆஜர் எதிரி ஓட்டி வந்த இருசக்கர வாகனமானது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து சுப்பிரமணி மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. நான் அவருக்கு பின்னால் 30-40 வித்தியாசத்தில் நானும் ராமசாமி என்பவரும் பைக்கில் வந்து கொண்டிருந்தோம். விபத்தில் சுப்பிரமணிக்கு கால், வலது கை போன்ற இடங்களில் பலத்த அடிபட்டிருந்தது. பின்னர் தனியார் ஆம்புலன்ஸ்க்கு அருகில் இருந்தவர்கள் தகவல் சொன்னார்கள். பின்னர் மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டதாக தகவல் கேட்டுத் தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

போலீஸ் மற்றும் முதல் விசாரணையில் நான் யாருடைய வண்டியில் ரேஷன் கடைக்கு சென்றேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சுப்பிரமணி ரேஷன் கடைக்கு சென்றுவிட்டு என்ன வாங்கிக்கொண்டு வந்தார் என்றால் அரிசி வாங்கி வந்தார். அந்த மூட்டையை அவரது வாகனத்தில் முன்பக்கமாக வைத்துக்கொண்டு வந்தார் என்றால் சரிதான். நான் வந்த இருசக்கர வாகனத்தை யார் ஓட்டி வந்தார் என்றால் ராமசாமி ஓட்டி வந்தார். விபத்து நடந்த உடன் நான் செல்வதற்கு முன்பு விபத்தில் அடிபட்டவரை தூக்கி உட்கார வைத்து தண்ணீர் கொடுத்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்து 2 நிமிடம் கழித்து சென்றேன் என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் அவருக்கு பின்னால்தான் வந்தேன். அதனால் நான் பார்த்தேன். விபத்தில் இறந்த சுப்பிரமணிதான் வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. கையை காட்டித்தான் திரும்பினார். போலீசாரிடம் விபத்து நடந்த சம்பவ இடத்தை காட்டவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.04.09 18:19:53 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 229/2023 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | ராமசாமி |
| Father Name | : | பெரியசாமி |
| Village | : | புள்ளச்செல்லிபாளையம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 45 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.04.2026

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது புள்ளச்செல்லிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நானும், பாலுசாமியும் ரேஷன் கடைக்கு சென்றுவிட்டு எங்கள் ஊருக்கு வந்து கொண்டிருந்தோம். கடந்த 22.05.2023 ஆம் தேதியன்று மாலை 4.30 மணியளவில் மூலனூர் – வெள்ளகோவில் ரோடு புள்ளச்செல்லிபாளையம் பிரிவு அருகே சுப்பிரமணி அவரது டிவிஎஸ் எக்ஸல் சூப்பர் வாகனத்தில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்று திரும்பும் போது ஆஜர் எதிரி ஓட்டி வந்த இருசக்கர வாகனமானது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி அதிவேகமாக வந்து சுப்பிரமணி மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. நான் அவருக்கு பின்னால் 30–40 வித்தியாசத்தில் நானும் பாலுசாமி என்பவரும் பைக்கில் வந்து கொண்டிருந்தோம். விபத்தில் சுப்பிரமணிக்கு தலை, கால், வலது கை போன்ற இடங்களில் பலத்த அடிபட்டிருந்தது. நான் அவரது மகனுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். பின்னர் தனியார் ஆம்புலன்ஸ்க்கு அருகில் இருந்தவர்கள் தகவல் சொன்னார்கள். பின்னர் மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டதாக தகவல் கேட்டுத் தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

போலீஸ் மற்றும் முதல் விசாரணையில் நான் யாருடைய வண்டியில் ரேஷன் கடைக்கு சென்றேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சுப்பிரமணி ரேஷன் கடைக்கு சென்றுவிட்டு என்ன வாங்கிக்கொண்டு வந்தார் என்றால் அரிசி வாங்கி வந்தார். அந்த மூட்டையை அவரது வாகனத்தில் முன்பக்கமாக வைத்துக்கொண்டு வந்தார் என்றால் சரிதான். நான் எனது இருசக்கர வாகனத்தை ஓட்ட பின்னால் பாலுசாமி அமர்ந்து வந்தார். விபத்து நடந்த உடன் நான் செல்வதற்கு முன்பு விபத்தில் அடிபட்டவரை தூக்கி உட்கார வைத்து தண்ணீர் கொடுத்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்து 2 நிமிடம் கழித்து சென்றேன் என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் அவருக்கு பின்னால்தான் வந்தேன். அதனால் நான் பார்த்தேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். விபத்தில் இறந்த சுப்பிரமணிதான் வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. கையை காட்டித்தான் திரும்பினார். விபத்திற்கு பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.04.09 18:20:00 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 229/2023 |
| Deposition of Witness | : | PW– 4 |
| Name | : | ஈஸ்வரன் |
| Husband Name | : | குமாரசாமி |
| Village | : | வெள்ளகோவில் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 59 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.04.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது வெள்ளகோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் எனது ஊருக்கு செல்லவேண்டி சென்று கொண்டிருக்கும்போது காலை சுமார் 7 மணியளவில் முன்தினம் நடந்த விபத்து பற்றி போலீசார் விபத்து நடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் பெரியசாமி என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 – 3 வரையானவர்கள் எனக்கு பழக்கமானவர்கள் என்றால் சரிதான். எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள். என்னிடம் கையொப்பம் பெற்றது எந்த போலீசார் என்றால் 3 வருடம் ஆனதால் தற்போது ஞாபகம் இல்லை. கையொப்பம் வாங்கும் போது எத்தனை ஆண் போலீசார் இருந்தார்கள் என்றால் ஒருத்தர் மட்டும்தான் இருந்தார். போலீசார் தயார் செய்த பார்வை மகஜர் தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்தில் இறந்தவர் எனக்கு பழக்கமான நபர் என்பதால் நான் காவல் நிலையத்தில் வைத்து

கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.04.09 18:20:08 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்